2018 ஜூலை 9]

288—

அடிப்படை வசதிகள்

***24756—திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதி, திருவந்திபுரம் அருள்மிகு தேவநாதசுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர் மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள் ஆகிய இருவரையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முன்னாள் அமைச்சரும் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினருமான அருமை அண்ணன் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள், குறிஞ்சிப்பாடி தொகுதி, தென் திருப்பதி என்றழைக்கப்படும் திருவந்திபுரம் அருள்மிகு தேவநாதசுவாமி திருக்கோயிலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியினை எழுப்பியிருக்கிறார்கள். கடலூரிலிருந்து சுமார் 9 கி.மீ. தொலைவில் கெடிலம் ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருவந்திபுரம் அருள்மிகு தேவநாதசுவாமி திருக்கோயில் 108 வைணவத் தலங்களில் ஒன்றாகும். புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், குறிஞ்சிப்பாடி தொகுதிக்கு 25 இலட்சம் ரூபாய் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இந்து சமய அறநிலையத் துறையால்

கழிப்பிடம், முடி காணிக்கை செலுத்துமிடம், மலைக் குன்றின்மேல் திருமண மண்டபம், மலைப் பகுதியைச் சுற்றிலும் மதில் சுவர், பயணிகள் அமரும் இருக்கைகள், தங்கும் விடுதி ஆகியவை சுமார் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. எனினும், இனிவரும் காலங்களில் இத்திருக்கோயிலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், கூடுதல் வசதிகள் தேவைப்படும் காரணத்தை மேற்கோள்காட்டி, சுற்றுலாத் துறையின் நிதிநிலை ஆதாரத்தைப் பொறுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முன்னாள் அமைச்சர், அருமை அண்ணன் அவர்களின் மேலான கவனத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பல வசதிகளை அந்தக் கோயிலுக்குச் செய்துள்ளதாகக் கூறுகின்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது 2006—2008 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியில்தான் அவை செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்தத் திருக்கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றார்கள். முகூர்த்த நாட்களில் அந்தக் கோயிலில் கிட்டத்தட்ட 200, 300 திருமணங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால் அதிகமான மக்கள் நெருக்கடி ஏற்படுகின்றது. இந்தக் கோயிலினுடைய சிறப்பம்சம் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. சம்பத் அவர்களுக்குத் தெரியும். ஏனென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 ஆண்டுகாலம் தொடர்ச்சியாக அமைச்சராக இருக்கின்றார். வாரம் ஒன்றிடண்டு தடவை அந்தக் கோயிலுக்கு வந்து செல்கின்றார். பதவியைத் தக்க வைப்பதற்காகச் செல்கின்றார்கள். அந்த அளவுக்கு, இன்னும் சொல்லப்போனால், அந்தக் திருக்கோயிலுக்கு. . .

2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கேள்வி கேட்கிற நீங்கள் ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர். இரண்டு பேரும் இப்படி நேரத்தை எடுத்துக்கொண்டால் நான் என்ன செய்ய முடியும்? எனக்கு இன்றைக்கு நேரமில்லை. உரையை முடியுங்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோயிலுக்கு வெளி நாடுகளிலிருந்தும், வெளி மாநிலத்திலிருந்தும் பக்தர்கள் வந்து செல்கின்றார்கள். உதாரணமாக, மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் தேவகவுடா அவர்களும், மாண்புமிகு இந்நாள் கர்நாடக முதல்வர் திரு. குமாரசாமி அவர்களும், மாண்புமிகு முன்னாள் கர்நாடக முதல்வர் திரு. எடியூரப்பா அவர்களும் இந்தக் கோயிலுக்கு வந்து சென்றிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், திரு. எடியூரப்பா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, அந்தத் திருக்கோயிலுக்கு ஒரு கோடி ரூபாயை கர்நாடக இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக வழங்கியிருக்கின்றார்கள். அந்த அளவுக்கு சிறப்பு மிக்க இக்கோயிலுக்கு இந்த அரசு ஏதாவது செய்யுமா என்ற நிலையை விளக்கிக் கூற வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அருமை சகோதரர் கேட்டுக்கொண்டபடி, சுற்றுலாத் தலங்களில் எந்தெந்த திட்டப் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்று ஓர் அரசாணை வெளிடப்பட்டிருக்கின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திருக்கோயிலின் சார்பாகக் கேட்டிருப்பதால், நிச்சயம் மத்திய அரசினுடைய நிதி ஆதாரத்தின் துணையோடு மத்திய அரசின் உதவித் திட்டத்தின்கீழ்-சுற்றுலா பயணிகளுடைய வருகை மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தால், தங்களுடைய கோரிக்கை சுற்றுலாத் துறை அலுவலர்களால் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நிதிநிலைக்கேற்ப பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு முன்னாள் அமைச்சர், அருமை அண்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திருக்கோயிலிலுள்ள அருள்மிகு தேவநாதசுவாமியை, அருள்மிகு திருப்பதி வெங்கடாஜலபதியினுடைய அண்ணன் என்று சொல்வார்கள். திருப்பதிக்குச் செல்ல முடியாதவர்கள் திருவந்திபுரம் அருள்மிகு தேவநாதசுவாமி கோயிலுக்கு வந்து சென்றால், அருள்மிகு திருப்பதி வெங்கடாஜலபதி திருக்கோயிலுக்குச் சென்ற பலன் கிடைக்கும் என்ற எண்ணத்தில் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றார்கள். ஆக, அத்தகைய திருக்கோயிலுக்கு இன்னும் சொல்லப்போனால், பள்ளிகளில், கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் தாங்கள் பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டுமென்றால், மலையில் இருக்கின்ற ஸ்ரீ ஹயகிரிவர் கோயிலுக்குச் சென்று வழிபட்டால் தேர்ச்சி பெறலாம் என்ற எண்ணத்தில் அங்கே அதிகமான அளவில் வந்து செல்கின்றார்கள். இத்திருக்கோயிலில் கழிப்பிட வசதி, தங்கும் வசதிகள் இல்லை. இத்தகைய அடிப்படை வசதிகளையெல்லாம் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே பல கோடி ரூபாய் அளவில் அந்தத் திருக்கோயிலுக்கு திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்தார்கள். சுகாதாரத்திற்காக 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையை உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். அதேபோல, உள்ளாட்சித் துறை மூலமாக நிதியை வழங்கியிருக்கிறார்கள். ஆக, இந்த ஆட்சியிலே எந்தத் திட்டமும் நிறைவேற்றவில்லை என்பது வருந்தக்கூடிய ஒன்றாக இருக்கிறது. அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெடிலம் ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருவந்திபுரம், அருள்மிகு தேவநாதசுவாமி திருக்கோயில் 108 வைணவத் தலங்களில் ஒன்றாகும். சுற்றுலாத்

2018 ஜூலை 9]

துறைக்கென அரசு ஒதுக்குகின்ற நிதியில் இந்தெந்தப் பணிகள் மட்டும்தான் செய்ய வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த வகையிலே ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி சுற்றுலாப் பயணிகள் அதிகம்பேர் வருகின்ற காரணத்தினாலும், வைணவத் தலங்களிலே அற்புதமான தலம் என்பதாலும், இந்தத் திருக்கோயிலில் வந்து வேண்டுதல் செலுத்தினால் எல்லா காரியங்களும் நிறைவேறும் என்கின்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையின்படியும் சுற்றுலாத் துறை அலுவலர்களை அங்கு அனுப்பி, ஆய்வு செய்து அங்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும்பட்சத்தில் என்னென்ன பணிகளை நிறைவேற்ற முடியுமோ, அவற்றையெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நிதிநிலைக்கேற்ப நிச்சயம் பரிசீலிக்கப்படும், செய்து தரப்படும் என்கின்ற உறுதியை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 289, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

289—

E.S.I. மருத்துவமனை

***25826—திரு. கே.பி.பி. சாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதி, கத்திவாக்கம் நகரத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தொழிலாளர் மாநிலக் காப்புறுதிக் கழகம் 2.0 திட்டத்தின்கீழ் மாவட்டம் முழுமைக்கான ஒருமுறை அறிக்கையை அரசு வெளியிடும்போது திருவொற்றியூர் தொகுதியிலுள்ள கத்திவாக்கம் பகுதியும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அப்பகுதியிலுள்ள தொழிலாளர்களும், அவர்களின் குடும்ப